**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, PATTUKKOTTAI**

| | | |
|---|---|---|
| Case Number | | CC No. 32 /2025 |
| Deposition of witness | | PW- 3 /LW- 4 |
| Name | | திரு. பக்கிரி(எ)பக்கிரிசாமி |
| Father's/Husband Name | | திரு. சாம்பான் |
| Village | | அதிராம்பட்டிணம் |
| Taluk | | பட்டுக்கோட்டை |
| Age | | 68/2025 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 6th day of November 2025**

**(சாட்சியிடம் சத்தியப்பிரமாணம் எடுப்பதற்கு நீதிமன்றத்தால் அதிகாரம் அளிக்கப்பட்ட நீதிமன்ற அலுவலர் செல்வி.கு.பரமேஸ்வரி, bench clerk Gr-3 என்பவரால் சாட்சியிடம் சத்தியபிராமாணம் எடுக்கப்பட்டது)**
**(சாட்சியை நீதிமன்ற தலைமை காவலர் 914 தமிழ்செல்வன் என்பவர் அடையாளம் காட்டி நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்டார்)**
**முதல் விசாரணை**

நான் கிராம உதவியாளராக பணிபுரிந்து கடந்த 30.04.2017 பணிஓய்வு பெற்று அதிராம்பட்டிணம் பள்ளிக்கொண்டான் ல் வசித்து வருகிறேன். இதற்கு முன்பு பட்டுக்கோட்டை தாலுக்கா பள்ளிக்கொண்டான் கிராம உதவியாளராக பணியில் இருந்தபோது 21.03.2014 காலை அதிராம்பட்டிணம் காவல் ஆய்வாளரர் அவர்கள் எனது கிராம நிர்வாகத்திற்கு உட்பட்ட பள்ளிக்கொண்டான் நொஞ்சிக்குளம், பிள்ளையார் கோவில் அருகில் டிராக்டரில் மணல் திருடி பிடித்துவைத்து இருப்பதாக கிராமநிர்வாக அலுவலருடன் என்னையும் அழைத்து வருமாறு கேட்டுக்கொண்டதன் பேரில் நாங்கள் இருவரும் உடன் புறப்பட்டு அங்கு வந்தோம். அங்கே மகேந்திரா TN 61 7353 என்ற டிராக்டரில் எண் இல்லாத டிரைலரில் மணல் இருந்தது. அப்போது ஆஜர் 2 ம் எதிரி பன்னீர்செல்வம் என்பவரை எங்கள் இருவர் முன்னிலையிலும் ஆய்வாளர் விசாரிக்க 2ம் எதிரி பன்னீர்செல்வம் தாமாக முன்வந்து தன்னை பற்றியும் தன் குடும்ப நிலவரம் பற்றியும் மணல் கடத்த பயன்படுத்திய டிராக்டர் 1ம் எதிரி சீனிவாசன் என்பவருக்கு சொந்தமானது

என்றும் இன்றை தினம் 21.03.2014 காலையில் வழக்கம் போல் ஓனருடன் மணலை லோடு ஏற்றிக்கொண்டு வரும்போது போலிசாரை கண்டதும் சீனிவாசன் ஓடிவிட்டார் தான் மாடிக்கொண்டதாலும் டிராக்டர் மற்றும் மணலுடன் கூடிய டிரைலரை ஒப்படைப்பதாக கூறி அன்றைய தினம் காலை 10.00 மணிக்கு ஒரு ஒப்புதல் வாக்குமுலம் கொடுத்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நானும் எனது கிராமநிர்வாக அலுவலர் முத்துகருப்பனும் சாட்சியாக கையெழுத்து போட்டோம். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையது . அந்த கையெழுத்து **அ.சா.ஆ.3** ஆகும். மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் வழக்கின் தடயப்பொருட்களான மகேந்திரா TN 61 7353 என்ற டிராக்டரில் எண் இல்லாத மணலுடன் கூடிய டிரைலரில் அன்றைய தினம் 21.03.2014 காலை 11.00 மணிக்கு எங்கள் இருவர் முன்னிலையிலும் அதிராம்பட்டிணம் ஆய்வாளர் மகஜரில் கைப்பற்றினார். அந்த கைப்பற்றுதல் மகஜரில் நாங்கள் இருவரும் சாட்சியாக கையெப்பம் போட்டோம். என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையது. இந்த வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

என் முன்பாக 2ம் எதிரியை கைது செய்யப்படவில்லை என்றாலும் எந்தவித பொருளும் கைப்பற்றபடவில்லை என்றாலும் சரியல்ல.

<u>மறு விசாரணை இல்லை</u>

மேற்கண்ட சாட்சியமானது திறந்த நீதிமன்றத்தில் சாட்சியானவர் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து / படிக்க கேட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக கையெழுத்து / கைரேகை செய்யப்பட்டது.

ஒம்/– திரு.த.சுதர்சன்.,எம்.ஏ.,எல்.எல்.பி.,
குற்றவியல் நீதித்துறை நடுவர்,
பட்டுக்கோட்டை